# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS.No**. 136/2012 **Date**: 02.07.2025

**PW**3- கோவிந்தராஜ்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

வாதிகள் எனக்கு உறவினர்கள் இல்லை, பக்கத்தில் குடியிருக்கிறார்கள். தாவா சொத்தில் ஒரு பகுதி பச்சியம்மாள் பெயரில் 1954 ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால், சரிதான். கிரையம் எழுதி கொடுத்தவர் அவரது கணவர் 1 ம் பிரதிவாதிதான் என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தைதான் தன் மனைவி பெயரில் பெயரளவில் கிரையமாக எழுதிக்கொடுத்தார் என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதியின் முதல் மனைவியின் வாரிசுகள்தான் வாதிகள். 2 ம் பிரதிவாதி அவருடைய இளையதாரத்தின் மகன் என்றால், சரிதான். தாவா 1 அயிட்ட சொத்தை வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டு குடும்ப சொத்தாகத்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால், சரியல்ல. அச்சொத்துக்களை பச்சியம்மாள் தனியாக அனுபவித்து வருகிறார் என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை 1 ம் வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் 50 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக பாகம் பிரித்து ஓட்டி வந்தார்கள் என்றால், சரிதான். பச்சியம்மாள் கிரையம் வாங்கிய சொத்தை அவர்தான் ஓட்டி வந்தார். 1 ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை 1 ம் வாதி, 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 6 ம் பிரதிவாதியின் தந்தைக்கு 09.02.1984 ல் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. நான் அதுபற்றி உண்மை தெரிந்தும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கு 50 வருடங்களுக்கு முன்பே பாகம் பிரித்துக்கொண்டதால், அந்த சொத்துக்கள் கூட்டு சுவாதீனத்தில் இருந்தது என்று சொல்வது பொய் என்றால்,

சரியல்ல. அவ்வாறு வாய்மொழி பாகத்திற்கு பின்னர்தான் 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு 21.09.2012 அன்று கிரையம் செய்து கொடுத்தார் என்றாலும், அது எனக்கு தெரியும் என்றாலும், சரிதான். அதேபோல் 6ம் பிரதிவாதி ஆனந்தனுக்கும் கிரையம் செய்து கொடுத்த நிலமும், 1, 2 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரிந்த நிலம்தான் என்றால், எனக்கு தெரியாது. நான் வாதி சொல்லி கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- கோவிந்தராஜ்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி